## சுருக்கம்

வேளாண்மைத் துறை – மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாடு நிறுவனம் - தஞ்சாவூர், வேலூர், பாளையங்கோட்டை மற்றும் கோயமுத்தூர் பகுதிகளில் திட்டச் செயல்பாட்டினை – 01.04.2016 முதல் 31.03.2017 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மைத் (வே.பொ.2) துறை

அரசாணை (டி) எண். 143 நாள்: 19.07.2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

ஆடி திங்கள் 4–ம் நாள்

படிக்க:

1. அரசாணை (டி) எண். 258, வேளாண்மைத் (வே.பொ.2) துறை, நாள்: 20.10.2015.
2. வேளாண்மை ஆணையரின் கடித எண்.மாபதி.2/046216/ 2016, நாள்: 18.05.2016.

----------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்றில் மண்வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு நிறுவனத்திட்டத்தினை தஞ்சாவூர், வேலூர், பாளையங்கோட்டை, மற்றும் கோயமுத்தூர் ஆகிய பகுதிகளில் 01.04.2015 முதல் 31.03.2016 வரையில் தொடர்ந்து நீட்டிக்க ரூ.188.71 இலட்சம் செலவில் நிதி ஒப்பளிப்பு மற்றும் தொடர் நீட்டிப்பும் செய்து ஆணை வழங்கப்பட்டது.

2. வேளாண்மை ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், மண் வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு நிறுவனத் திட்டத்தின் கீழ் மண் மற்றும் நில வளங்கள் பற்றிய ஆதார தொகுப்பை அதன் இரசாயன இயற்பியல் சம்பந்தமான குணாதிசயங்களின் மூலம் கண்டறிந்து வகைப்படுத்துதல், மண் வள வகைகளையும் அவற்றின் நிலப்பரப்பையும் காட்டும் மண் வரைபடங்களைத் தயாரித்தல், வேளாண் திட்டமிடல் பணிக்காக வெவ்வேறு பொருள் பொதிந்த வரைபடங்களைத் தயாரித்தல், குறிப்பிட்ட பயன்பாட்டிற்காகவோ அல்லது மாற்றுப் பயன்பாட்டிற்காகவோ நிலவள ஆதார விவரங்களைச் சேகரித்து முறைப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன, 2008-2009 ஆம் ஆண்டில் பண்ணை அளவிலான திட்டமிடலுக்கு தேவையான மண் வகையீடு பணிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் 10 வட்டாரங்களில் ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 3.00 இலட்சம் எக்டர் பரப்பளவில் பணி நடைபெற்றது. 2011-12 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேலும் 4 வட்டாரங்களில் 36,000 எக்டரில்

விரிவான மண் வகையீடு செய்தல், நில வள ஆதாரங்கள் சேகரித்தல், பஞ்சாயத்து வாரியான மண் வகைகள் கண்டறிதல் மற்றும் 0.99 இலட்சம் எக்டர் நிலங்களை விரிவான மண் வகையீடு செய்ய உத்தேசிக்கப்பட்டு மார்ச் 2012 வரை 51,666 எக்டர் நிலத்தில் விரிவான மண் வகையீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2012–2013 மற்றும் 2015–2016–ஆம் ஆண்டில் 0.99 இலட்சம் எக்டர் நிலங்களை விரிவான மண் வகையீடு செய்ய உத்தேசிக்கப்பட்டு முறையே 86,918 எக்டர் நிலத்தில் விரிவான மண் வகையீடு செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார்.

3. மேலும், வேளாண்மை ஆணையர் இத்திட்டத்தினை 2016-2017-ல் செயல்படுத்துவதற்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.271.09 இலட்சம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| (i) பணியாளர் செலவினம் | ரூ.257.61 இலட்சம் |
| (ii) வாகனங்கள் செலவினம் | ரூ.2.03 இலட்சம் |
| (iii) தொடர் செலவினம் | ரூ.8.33 இலட்சம் |
| (iv) தொடராச் செலவினம் | ரூ.2.12 இலட்சம் |
| (v) 2015-16ஆம் ஆண்டின் ஊதியங்கள் நிலுவைத் தொகை | ரூ.1.00 இலட்சம் |
| ஆக மொத்தம் | ரூ.271.09 இலட்சம் |

மண்வள ஆதாரங்களைப் பொறுத்தே, நில உபயோகத் திட்டங்கள் செயல்படுத்துதல், கிராம அளவில் நுண் திட்டமிடுதலை வலுப்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு விரிவான மண் வகையீடு அவசியமாகிறது. மாறிவரும் நில உபயோகங்களுக்கேற்ப வேளாண் பெருமக்கள்/தனியார் மற்றும் விஞ்ஞானிகள் உபயோகத்திற்கு விஞ்ஞான பூர்வமான விரிவான மண் வகையீடு தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இத்திட்டம் அத்தியாவசியமாக தொடர்ந்து செயல்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. வேளாண்மை ஆணையரின் கருத்துருவை அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து, தஞ்சாவூர், வேலூர், பாளையங்கோட்டை மற்றும் கோயமுத்தூர் ஆகிய பகுதிகளில் மண்வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு திட்டத்தினை 01.04.2016 முதல் 31.03.2017 வரையில் தொடர்ந்து செயல்பட ரூ.270.09 இலட்சம் (ரூபாய் இரண்டு கோடியே எழுபது லட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்) செலவில் நிதி ஒப்பளிப்பு மற்றும் தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்படும்:–

"2402 - 00 – மண்வள, நீர்வளப் பாதுகாப்பு -101 – மண்வள ஆய்வும் சோதனையும் - I - திட்டத்தில் சேராதது – AB - மண்வள ஆய்வு மற்றும் நிலப்பயன் நிறுவனம்"

(த.தொ.கு.2402-00-101-AB-0004).

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.33179/நிதி (வேளாண்மை) துறை/2016, நாள் 08.07.2016-இன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சென்னை-5.
முதன்மை மாநிலக் கணக்காயர் (Audit-I / G&SSA / E&RSA), சென்னை – 18 (பெ).
கருவூல அலுவலர், தஞ்சாவூர், வேலூர், பாளையங்கோட்டை மற்றும் கோயம்புத்தூர்.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம் (G&SSA), சென்னை – 9.

**நகல்:**
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலரின் தனிச்செயலர், சென்னை –9.
நிதித் துறை, சென்னை – 9.
வேளாண்மைத் (அநமு–3) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/7/16
பிரிவு அலுவலர்
25/7/16